மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, லாபத்தினுடைய சதவீதத்தை குறைப்பது அந்த நிறுவனத்தினுடைய எஸ்டபிளிஸ்மெண்ட் செலவுகள், ஏறத்தாழ 610 விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் வெளிநாடுகளில் சிங்கப்பூர் உள்பட பல விற்பனை நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அந்த இடங்களுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை போன்ற பல்வேறு செலவினங்களுக்கு பணம் தேவைப்படுகிறது. ஒரு நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவர முடியாது. அப்படி இயங்கிக் கொண்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களே பின்னாலே ஒரு கேள்வியைப் போடலாம். ஆகவே அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட பால சேவிகாக்கள்.

97—(* வினா எண். 16884)—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2-5 வயது) பாலசேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது, நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை போடப்பட்டுள்ளது?

(இ) அவர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் : (அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2-5 வயது) பால சேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது நகர்ப்புறங்களில் 15,592 பேர்களும், கிராமப்புறங்களில் 93,982 பேர்களும் ஆக மொத்தம் 79,574 பேர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டனர்.

(ஆ) அவர்களில் நகர்ப்புறங்களில் 4,907 பேருக்கும் கிராமப்புறங்களில் 23,0 13 பேருக்கும் ஆக மொத்தம் 27,920 பேர்களுக்கு வேலைவாய் ப்பு வழங்கப்பட்டது.

(இ) இவர்களுக்கு மாதம் ரூ. 175 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் இயங்கிடும் கால்நடை கிளை நிலையங்கள்.

98— (* வினா எண். 17361)—திரு. இரெ. இராசமாணிக்கம் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் இயங்கிவரும் கால்நடை கிளை மருத்துவமனைகள் அனைத்தும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றனவா?